**<u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.. 88/2024 தேதி- 06.11.2025

(P.W.1) . ஆபிரகாம்தொபியாஸ்

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் ஏஜன்சி வைத்துள்ளேன். மற்றும் சிட்பண்ட் நிறுவனம் நடத்தி வருகிறேன். நான் ஏஜன்சி எடுத்து துணி வியாபாரம் செய்து வருகிறேன். சொத்துக்களை வாங்கி விற்கும் வேலை செய்யவில்லை. எனக்கு கடனாக தெரிந்தவர்களுக்கு பணம் கொடுக்கும் பழக்கம் உண்டு. நான் கடனாக கொடுக்கும்போது எந்த ஆவணமும் எழுதி வாங்குவதில்லை. எனக்கு 2 ஆம் பிரதிவாதியை தெரியும். எனக்கு 20 வருடத்திற்கு முன்பிருந்தே அவரைத் தெரியும். 2 ஆம் பிரதிவாதியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையில் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 3 கி.மீ தொலைவு இருக்கும்.

பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்ட சொத்தில் வீடு இருக்கிறது என்றால் சரிதான். அவர்களது வீடு அழகியமண்டபம் மேக்காமண்டபம் செல்லும் சாலையின் 150 மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சரிதான். அவர்களது வீட்டின் மதிப்பு எவ்வளவு இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் 1 சென்டிற்கு ஒரு லட்சம் ஆகும்.

வழக்கு பட்டிகை சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 சென்ட் ஆகும். கிரைய உடன்படிக்கையில் 1. 225 சென்ட் உள்ளது என்றால் முன் ஆவணத்தில் இருந்த சொத்தின் விஸ்தீரணத்தை அப்படியே கிரைய உடன்படிக்கையில் குறிப்பிட்டு எழுதப்பட்டிருக்கிறது. வழக்கு பட்டிகை சொத்தின் முன் ஆவணம் எதைப்பார்த்தேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. பிரதிவாதியிடமிருந்து முன் ஆவணம் எதையும்

நான் வாங்கவில்லை.

வழக்கு பட்டிகை சொத்தின் எல்கை தெரியுமா என்றால் தெரியும். கிழக்கு பக்கம் ரோடு மற்றும் குளம் இருக்கிறது. மேற்கு பக்கம் பிரதிவாதியின் உறவினர் வீடு உள்ளது. தெற்கு பக்கம் மற்றொரு உறவினர் வீடு இருக்கிறது. வடக்கு பக்கம் ஒரு வீட்டின் காம்போண்ட் சுவர் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்து ரோட்டை தொட்டு உள்ளதால் மதிப்பு அதிகமாக இருக்கும் என்றால் 1 சென்டிற்கு ஒருலட்சம்தான். நான் எல்கையாக குறிப்பிட்டிருப்பது தவறு. பட்டிகை சொத்தைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில்தான் பிரதிவாதிகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதை தற்போது புதுப்பித்து கட்டியிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வழக்கு பட்டிகை சொத்தை புதுப்பித்து கட்டியிருக்கிறார்கள் அந்த செலவிற்காகத்தான் என்னிடம் கடன் வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

கிரைய உடன்படிக்கையில் கிரையத்தை நிறைவேற்ற 08.07.2023 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். கிரையத்தை நிறைவேற்ற காலகெடுவாக 11 மாதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மீதம் 10000 ரூபாயை கொடுத்துவிட்டு கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கவேண்டுமென்று கிரைய உடன்படிக்கையில் இருக்கிறது என்றால் சரிதான். 90000 ரூபாயை பெற்றுக்கொண்டு மீதம் 10000 ரூபாய் கொடுப்பதற்கு 11 மாத காலம் இடைவெளி இருப்பதற்கான காரணம் என்ன என்றால் உடன்படிக்கையின்படி ஏற்படுத்திக்கொண்ட கால இடைவெளிதான்.

நான் பிரதிவாதிகளுக்கு கடனாக கொடுத்ததால்தான் 11 மாத காலம் இடைவெளி கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இதற்கு முன்பு கிரைய உடன்படிக்கை போட்டு சொத்தை வாங்கியுள்ளேனா என்றால்

வாங்கியுள்ளேன். முன்பு போட்ட உடன்படிக்கையின்படி அட்வான்ஸ் தொகை குறைவாகவும் மீதம் ரூபாய் அதிகமாகவும் இருக்கும் என்றால் சரியல்ல.

வழக்கு அறிவிப்புபடி பிரதிவாதிகளை 15 நாட்களில் வந்து கிரையத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதற்காக தக்கலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரச்சொன்னேன். வழக்கறிவிப்பின் அடிப்படையில் 15 நாட்கள் கழித்து தக்கலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா அதற்காக ஆவணங்களில் ஏதாவது கையெழுத்து போட்டேனா என்றால் நான் அங்கு சென்றேன் பிரதிவாதிகள் அங்கு வரவில்லை. நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் சென்றேன் ஆவணம் எதுவும் இல்லை.

நான் கடனாக கொடுத்த காரணத்தால்தான் கிரைய உடன்படிக்கையை நிறைவேற்ற நான் தயாராக இல்லை என்றால் சரியல்ல. 90 சதவீதம் பணத்தை கொடுத்துவிட்டு மீதம் 10 சதவீததற்காக கிரையத்தை நிறைவேற்ற ஒருவருட காலம் தாழ்த்தியது கிரைய ஒப்பந்தத்திற்காக அல்ல கடனுக்காக என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. உண்மையில் இது கிரைய உடன்படிக்கை கிடையாது. வட்டிக்கு கடனாக கொடுக்கப்பட்டதற்கு எழுதி வாங்கிய ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாங்கிய கடனை உறுதிப்படுத்துவதற்காக வாங்கிய ஆவணம்தான் வா.சா.ஆ-1 என்றால் சரியல்ல.

பிரதிவாதிக்கு வழக்கு பட்டிகை சொத்தை விற்கவேண்டிய அவசியம் கிடையாது. அவர்களுக்கு வழக்கு பட்டிகை சொத்தை தவிர வேறு சொத்து கிடையாது. அந்த சொத்தில்தான் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் தெரியாது. வழக்கு தள்ளுபடி

செய்யவேண்டுமென்றால் சரியல்ல.